(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 22 UTL 4O4

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி
பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2024

இளநிலை பட்ட வகுப்புகள் மதிப்பெண்கள் : 50

அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் நீங்கலாக) மற்றும்

சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம்./பி.எஸ்ஸி.சமூக சேவையியல் மட்டும்)

நான்காம் பருவம் நேரம் : 3 மணி

## பகுதி – 1

## தமிழ்த்தாள் - 4

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** (K1)

1 கடலும் கடல் சார்ந்த இடமும் எது?

அ. நெய்தல் ஆ. குறிஞ்சி இ. பாலை ஈ. மருதம்

2 'தனக்குப் பாழ்' எது என்று நான்மணிக்கடிகை கூறுகிறது?

அ. வாள்நுதலின்மை ஆ. நட்டோர் இன்மை

இ. கற்றறிவில்லாஉடம்பு ஈ. மூத்தோர் இன்மை

3 சிவபெருமானால் அம்மையே என்றழைக்கப்பட்டவர் யார்?

அ. ஔவையார் ஆ. காரைக்காலம்மையார்

இ. உத்தரகோசமங்கை ஈ. பார்வதி

4 காந்தியடிகளை அறியாதவர் இலர் - இது எவ்வகை வாக்கியம்?

அ. செய்வினை ஆ. தன்வினை இ. பிறவினை ஈ. எதிர்மறைவினை

5 நல்ல எனும் அடைமொழி உடைய சங்க நூல் எது?

அ. நற்றிணை ஆ. குறுந்தொகை இ. ஐங்குறுநூறு ஈ. கலித்தொகை

**ஓரிரு சொற்களில் / தொடர்களில் விடையளிக்கவும்.**

6 சால்பு–பொருள் கூறுக.

7 நிரப்புக: -----------, ---------நூல்களுக்காகச் சிற்பி சாகித்திய அகாதெமி பரிசுபெற்றார்.

8 நாட்டுப்புற நம்பிக்கைகள் இரண்டினைக் கூறு.

9 கடி எனும் உரிச்சொல் கூறும் பல பொருள்கள் எவை?

10 சிலப்பதிகார உரையாசிரியர் கூறும் நாடக நூல்களின் பெயர்கள் இரண்டினைக் கூறுக.

### பகுதி– ஆ 5x3=15

அனைத்துவினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. அ. தோழி சிறைப்புறமாகக் காப்புமிகுதிக்கண் கூறியவை பற்றிய செய்தி குறுந்தொகைப் பாடலில் எங்ஙனம் வெளிப்படுகிறது?

(அல்லது)

ஆ. திரிகடுகம் கூறும் அறங்களை எழுதுக?

(த.பி.பா.)

ETHICAL PAPER

12. அ. பாரதிதாசனின் படைப்பாளுமையைக் கு.வெ. பாலசுப்பிரமணியம் எவ்வாறு குறிப்பிடுகிறார்?.

(அல்லது)

ஆ. பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரனார் பற்றிஎழுதுக.

13. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

அ. மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுட் கற்புடையாட் பெற்றானும்.

(அல்லது)

ஆ. மானிடம் என்றொருவாளும் அதை
வசத்தில் அடைந்திட்டஉன்இருதோளும்.

14. அ. கருத்துவகை வாக்கியங்களை எடுத்துக் கூறுக.

(அல்லது)

ஆ. உரிச்சொல் அமையும் திறத்தைக் கூறி விளக்குக.

15. அ. சங்க அகநூல்களின் சிறப்புகளை உணர்த்துக.

(அல்லது)

ஆ. இருபதாம் நூற்றாண்டில் நாடகக்கலை பெற்றிருந்த செல்வாக்கினை உரைக்கவும்.

## பகுதி-இ 5x5=25

அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. அ. ‘மண்திணிந்தநிலனும்’எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் கருத்தைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

ஆ. சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை ஆய்க.

17. அ. முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய நூல்கள் கூறும் தனிமனித அறங்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ. திருவாலங்காடு பற்றிக் காரைக்காலம்மையார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

18. அ. திருக்குறள் காட்டும் ஆளுமைத் திறனை விவரி.

(அல்லது)

ஆ. கவிஞர் சிற்பியின் கவிதை மொழிபெயர்ப்புத் திறன் குறித்துக் கட்டுரை வரைக.

19. அ. சந்திரஹரி நாடகத்தின் மொழிநடையின் தனித்தன்மையை புலப்படுத்துக.

(அல்லது)

ஆ. நகைச்சுவை உணர்வை வெளிக்கொணரும் சந்திரஹரி நாடகத்தைத் திறனாய்க.

20 தமிழில் மொழிபெயர்த்தெழுதுக.

Abraham Lincoln was born in a log cabin in kentuckyon February 12, 1809 to parents who could neither read nor write. Lincoln considered education the most important subject, he wanted all the people of his country to be in engaged in it and get atleast moderate education so that they could enable themselves to read not only the history of their own country. but of other countries also.

(அல்லது)

The environment means the things that surround us. It is everything that makes up our surroundings and affects our ability to live on the earth. The air, water, land, plants, animals, solid wastes and other things that are surrounding us constitute our environment. Man cannot exist without environment and environment cannot exist without man.

*************